
நிழலாக தொடரும்
சிலுவையின் நிஜங்கள்
உங்கள் அயலான் – திரு டிசில்வா
வெலிங்டன், உதகை மறைமாவட்டம்.
https:// anbinmadal.org

# நிழலாகத் தொடரும் சிலுவையின் நிஜங்கள்.

**நிஜம் உண்மை நிழல் மாயை**

**நிஜத்தின் பிரதி பிம்பம் நிழல்.**

**நிஜத்தை தொடர்வது நிழல்**

**நிஜத்தை பிரதிபலிப்பது நிழல்**

**நிஜத்தை விட்டு நீங்காதது நிழல் நிஜத்தை தன் இருப்பிடமாகக் கொண்டது நிழல்**

**இன்று உலகில் இயேசு கிறிஸ்து என்றால் சிலுவை - சிலுவை என்றால் இயேசு கிறிஸ்து என்று அடையாளப் படுத்தப்படும் நிலைக்கு மரச்சிலுவை இயேசுவின் நிழலாக மாறிவிட்டது.**

**ஒரு நாளில் நான்கில் ஒரு பகுதி - கால்பங்கு, அதாவது 6 மணி நேரம் இயேசுவுடன் நிழலாகத் தொடர்ந்த மரச்சிலுவைக்கு இந்தப் பெருமை உரிமையாயிற்று - என்றால்...**

**வாழ்நாள் முழுவதும் அவரைச் சுமக்கவும், அவரோடு அவரில் அவருக்காக வாழவும் அழைக்கப்பட்டுள்ள நமது வாழ்க்கையின் குறியீடு என்ன?**

**நாம் குறியீடாக இயேசுவின் மதிப்பீடுகளை நமது வாழ்க்கை முறையால் உலகில் : நிழலெனப் பிரதிபலிக்க அழைக்கப் பட்டுள்ளோம்.**

**இந்த அழைப்பை எப்படி நிறைவேற்றுகின்றோம் என்பதை புரிந்து கொள்ளவும் - நம்மைப் புடமிட்டு புதுப்படப்பாக மாற்றவும்... வாருங்கள் நிழலாகத் தொடர்வோம் சிலுவையின் நிஜங்களை.**

**இவன்**

**உங்கள் அயலான்.**

**A.C.டிசில்வா. புனித சூசையப்பர் பங்கு**
**வெலிங்டன், ஊட்டி மறைமாவட்டம்- 643231.**

**கைபேசி 8825576373.**

# முதலாம் நிலை

## இயேசு தீர்ப்பிடப் படுகின்றார்.

**மனுமகனும்... மனிதமும்...**

**தனிமனித வாழ்க்கை இன்று ஒவ்வொரு வினாடியும் ஒரு தீர்ப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. முடிவைத் தேடும் மனிதனுக்கு, தீர்ப்புகள் தொடர்கதை ஆகிவிட்டன.**

**ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அதிகாரத்தில் உள்ளவர் ஆண்டவனுக்குச் சமம் என்று மக்கள் வாழ்ந்த காலத்தில் - ஆளுநர் பிலாத்துவின் முன் இயேசு தீர்ப்பிடப்படுகின்றார். பிலாத்துவின் தீர்ப்பு அற்பமாகத் தோன்றினாலும், ஆழ்ந்து நோக்கும்போது அஃது அற்புதமாக இருந்தது. ஆம், பிலாத்து இயேசுவை ‘‘இதோ மனிதன்’’ என்று தீர்ப்பிட்டான்.**

**இயற்கையில் மனிதர்கள் மட்டும் மதம் இனம் மொழி தொழில் என்று பிரிந்து கிடக்கின்ற நிலையில் - அன்று இயேசு... யூதன், தச்சன், இறைமகன், போதகர், மீட்பர், இம்மானுவேலன், கலிலேயன் நஸ்ரேயன், பாவிகளின் நண்பன், கொலைக் குற்றவாளி, யூதர்களின் அரசன் - எனப் பன்முகத்தன்மை கொண்டவராகப் பிலாத்துவின் முன் நிறுத்தப்பட்டார். இருந்தும்... ஆளுனர் பிலாத்துவிற்கு அவர் ஒரு ‘‘முழு மனிதனாக’’ காணப்பட்டார். காரணம்...**

**பிலாத்து - இயேசுவை விசாரித்தபோது, அவரிடம் கண்ட அமைதி, மனத்தெளிவு, தைரியம், பதில்களில் கண்ட உறுதி, இறைவன் மீது அவர் கொண்டுள்ள பற்று, மேலாக மரண வேதனையை அனுபவிக்கும் நிலையிலும் தன் நிலை மாறத் தனித்தன்மை ஆகிய சிறப்புகள் இறை சாயலும் - இறை ஆவியும் உள்ள முழு மனிதனாக இயேசுவை பிலாத்துவின் முன் நிறுத்தின. விவிலியமும் தொடக்க நூலில் இறை சாயலும் இறை ஆவியும் உள்ளவன் - மனிதன் என்று உறுதி செய்கின்றது.**

**மறுவாழ்வைத் தேடும் கிறிஸ்தவனுக்கு - மனிதனுக்கு, இறுதித் தீர்ப்பு முக்கியமல்ல. மாறாக, பிலாத்து இயேசுவுக்குள் கண்ட குணநலன்களே முக்கியம். இறை சாயலும் - இறை ஆவியும் நமது பன்முக - அடையாளமாக அயலான் கண்கள் காணும்போது; இறைவன் ‘‘இதோ மனிதர்கள் - இவர்களே என் அன்பார்ந்த மக்கள்’’ என்று அறிக்கையிட வாய்ப்பு உண்டாகும். தீர்ப்பு நெருங்கி விட்டது... இறைவன் மனிதனுக்குத் தந்த பன்முக அடையாளத்தை இறை சாயலும் இறை ஆவியும் கொண்ட மனிதத்தைத் தேர்ந்தெடுத்து வாழ்வாக்குவோம்.**

**செபம்:- இறைவா, எங்களுடைய வாழ்வின் எல்லாச் சூழல்களிலும் நீர் எனக்குத் தந்த உமது சாயலும் - உமது ஆவியும் என்னுள் உயிராய் இருந்து, ஒரு முழு மனிதனாக நான் வாழ் அருள் தரும்.**

# இரண்டாம் நிலை

## இயேசுவின் தோள்கள்மீது சிலுவை சுமத்தப்படுகின்றது.

**கடமை... பொறுப்பு... கண்ணியம்...**

**நமது கடமைகளை முழுப் பொறுப்புடன் நிறைவேற்றும்பொழுது, நாம் கண்ணியத்துடன் மதிக்கப்படுகிறோம். பாருங்கள் இயேசு, இஃது ஆரம்பம் - முடிவு அல்ல என்ற புரிதலுடன் சுமைதாங்கியாய் தோள்மீது சிலுவையைச் சுமந்த வண்ணம் கல்வாரியைக் காண முயற்சிக்கின்றார்.**

**21ம் நூற்றாண்டின் மனிதன்; செல்லும் இடங்களில் எல்லாம் சந்திக்கும் அனைவருள்ளும் தனது தனிமனித சுய கண்ணியத்தை முனைப்புடன் ஆர்வமாய்த் தேடுகின்றான். நல்லது. அதேவேளை அந்தக் கண்ணியத்திற்கு அச்சாரமாக இருக்கும் பொறுப்புகளை ஆர்வமுடன் ஏற்க வேண்டும் என்ற புரிதல் - அவனுள் இருக்க வேண்டாமா?... இயேசு இறை சித்தத்தை (கடமையை) நினைவு கூர்ந்தவராகப் பொறுப்புடன் சிலுவையைத் தோள்களில் சுமந்தார். இன்று அவர் தெய்வீக கண்ணியத்துடன் ஆராதிக்கப் படுகின்றார்.**

**நமது நிலை என்ன?. நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை பிறருடைய பொறுப்பான செயல்பாடுகளால் நிறைவோடும் மகிழ்ச்சியோடும் நாட்களைக் கடந்து செல்கிறோம். நாமும், நமது பொறுப்பான செயல்களால் பிறருக்கும் பயன்தரும் வாழ்வு வாழ உறுதி கொள்வோம். பெருகிவரும் பற்றாக் குறைகளும் அதனால் உருவாகும் வன்முறைகளும் வெகுவாய் குறைந்திட நமது பொறுப்புள்ள வாழ்வு நிச்சயம் பலன்தரும்.**

**தனிமனிதனாக நான் என்ன செய்ய முடியும்?**

**என்று கேட்க வேண்டாம். தனி ஒரு செங்கல்லும் கோட்டைச் சுவரின் உறுதிக்கு மிக முக்கியம். ஒருவேளை அது மூலைக் கல்லாகவும் இருக்கலாம். நமது பொறுப்புள்ள ஒவ்வொரு சிறு செயலும் அனைவரும் நிறைவுடன் வாழ வலிமை தரும். வாழ்வா சாவா என்ற நிலையிலும், இயேசுவின் பொறுப்புள்ள செயல் உலகிற்கு மீட்பைத் தந்தது. நமது பொறுப்புள்ள செயல்கள் அனைவருக்கும் நிறைவாழ்வு என்ற நிலைப்பாட்டைத் தருவதாக.**

**இயேசு சுமந்தது பாரமான வேதனைதரும் மரச்சிலுவையாக இருந்தது. அஃது அவருக்கு மரணத்தைத் தந்தது. அவர் தனது சீடர்களான - நமக்குச் சுமக்கச் தரும் சிலுவை மன்னிப்பு அன்பு அரவணைப்பு என்ற மனிதநேய கோட்பாடுகளின் உயிருள்ள சிலுவையாகும். இது நிறை வாழ்வின் சிலுவையாகும்... எனவே, வாழ்நாள் முழுவதும் நம் தோள்களில் இதை நமக்காகவும் - அயலானுக்காகவும் சுமந்திட பெருமையும் பூரிப்பும் அடைவோம், நிலை வாழ்வில் இணைவோம்.**

**செபம்:- இயேசுவே உமது அன்பின் சிலுவையை - (அயலானை) கடமையுடன் பொறுப்பாக என் தோள்களில் கண்ணியத்துடன் சுமக்க உமது அருளைத் தரும்.**

# மூன்றாம் நிலை

## இயேசு முதல் முறை கீழே விழுகின்றார்.

முதல் முறை என்பது மிக மிகக் கவனத்திற்கு உரியது.

‘‘நீங்கள் கடவுளைப் போல் ஆக முடியும்’’ என்ற அலகையின் மாய வார்த்தைகளால் ஏவாள் இறை உறவிலிருந்து முதல் முறை வீழ்ந்தாள். இங்கு மனிதர்கள் கடவுளோடு அப்பா - தந்தாய் உறவில் இணைய வேண்டும் என்பதற்காக இயேசு கல்வாரியின் பாதையில் முதல் முறை மண்ணில் விழுகிறார். ‘‘முதல் முறை’’ என்ற இந்த வார்த்தை பல நேரங்களில், நாம் செய்யும் நன்மைக்கும் தீமைக்கும் அடையாளமாக நிற்கின்றது. இயேசு, யூதேயா, கலிலேயா நாடு முழுவதும் முதல் முறையாக உலகம் நம்ப முடியாத பல உன்னதச் செயல்களைச் செய்தார் ஆனால் அவை யாதும் பெரிதாகப் படவில்லை; காரணம் இயேசுவின் எல்லாச் செயல்களுமே… உலகிற்கு முதல்முறை காணும் சிறப்பான செயல்களாக இருந்தன.

இப்படிப்பட்ட இயேசு, மண்ணில் சிலுவையின் பாரத்தால் கீழே விழுந்ததை உலகம் உன்னிப்பாகக் கவனித்தது. இந்த நசரேயனும் நம்மைப் போலத்தான் என்று ஏளனம் செய்தது. நகைத்த உலகம் கவனிக்கத் தவறிய மாபெரும் - ஆச்சரியம் தந்த திருப்பம்… விழுந்தவர் - தானாக ‘‘முதல் முறையே’’ எழுந்தார் என்பதே.

நாம் இன்று கிறிஸ்துவை அடையாளம் காட்டக்கூடிய வாழ்க்கையை வாழ்பவர்கள். நமக்குள்ளும் முதல் முறை என்ற அழிக்க முடியாத நினைவுகளும் அனுபவங்களும் ஆயிரம் உண்டு குறிப்பாக வாலிப உள்ளங்களில் அவர்களுடைய எதிர்காலம்குறித்த முதல் முறைக் கனவுகள், அனுபவங்கள் அதிகம் உண்டு. இவற்றில் நன்மையும்-தீமையும், இன்பமும்-துன்பமும், மகிழ்ச்சியும் இகழ்ச்சியும் எனப் பல பிரிவும் உண்டு.

இவற்றைக் காணும் உலகம் இவர்களும் நம்மைப் போலத்தான் என்று ஏளனம் செய்கிறார்களா? அல்லது வீறுகொண்ட நமது எழுச்சியைக் கண்டு ஆச்சரியம் அடைகிறார்களா? யோசிப்போம்.

வாழ்க்கையில் வீழ்ச்சிகள் உண்டு, அதை யாரும் தடுக்க இயலாது. விழுவதைப் படிகளாக்கி நாம் அதில் துடிப்புடன் எழுந்து நிற்கும்போது… நமது இலக்கை நோக்கிப் பயணிக்கும்போது, - ஒளியுடன் கிறிஸ்து உயிர்ப்போடு நம்மில் ஒளிர்வதை - உலகம் கண்டு ஆச்சரியப்பட வாய்ப்பை நல்குவோம். ஆம் வீழ்ச்சிகள் முதல் முறை என்றாலும் முளையிலேயே கிள்ளி எறிவோம். ஏவாளால் ஒருமுறை உருவான கல்வாரி மீண்டும் மண்ணில் உயராமல் இருக்கட்டும்.

செபம்:- இறைவா முதல் முறை என்றாலும் கவனத்துடன் அதில் உயிர்ப்போடு வாழும் உண்மைக் கண்டு ஆராதிக்க அருள் தாரும்.

# நான்காம் நிலை

## அன்னை மரியா இயேசுவை கல்வாரிப்பாதையில் சந்திக்கிறார்கள்.

சாதனைகளுக்கு நேர்முகச் சந்திப்புகள் மிக அவசியம்.

தாபோர் மலைமீது ஒளி வெள்ளத்தில் நின்ற இயேசுவை இறை மனிதர்கள் சந்தித்தார்கள். கல்வாரிப் பாதையில், மரண வேதனையுடன் மனுக்குல மீட்பை நோக்கிப் பயணிக்கும் அன்பு மகனை அன்னையவள் சந்திக்கின்றார். மனுக்குல மீட்பின் செயல் திட்டம் தாபோர் மலை சந்திப்பில் இறுதி செய்யப்பட்டது. செயல் வடிவம் பெற்ற அத்திட்டம் இயேசு -அன்னை மரியின் கல்வாரிச் சந்திப்பால் நம்பிக்கையுடன் உறுதி பெற்று நிறைவேறத் தொடங்கியது.

இவை நிகழ்ந்தபோது அன்னைக்கும் அன்பு மகனுக்கும் இறை சித்தத்தைத் தவிர அவர்கள் பட்ட ஏளனம், அவமானம், மரணவேதனையென எதுவும் முக்கியமாகப் படவில்லை. இலக்கு ஒன்றானதால் ஒருவர் மற்றொருவருக்கு ஆறுதலாகவும் நம்பிக்கையாகவும் நிற்பதில் உறுதி கொண்டனர். சாதனைகளை உருவாக்கச் சரியான புரிதல்கள் ஏற்படச் சந்திப்புகள் பயன்படுவதால் இன்றும் உலகம் சந்திப்பிற்கு முக்கியத்துவம் தருகின்றது.

சாதனைகளை உருவாக்க நேர்முகச் சந்திப்புகள் மிக அவசியம். கவனிக்க, அன்பு மகன் இலக்கை அடைய அன்னைமரியா இருக்கும் இடத்தைவிட்டு கல்வாரிச் சிலுவைவரை மகனைப் பின் தொடர்ந்தார். இயேசு மனுக்குலம் மீட்பு பெற எருசலேமை விட்டுக் கல்வாரி நோக்கி நடந்தார். ஏன், குருடன் பார்வை பெறவும், பெரும்பாடு உள்ள பெண் குணம் பெறவும் - இருந்த இடத்தை விட்டுவிட்டு இயேசுவை நேருக்கு நேர் சந்திக்கச் சென்றார்கள் என்று வாசிக்கின்றோம்.

இன்று நாம் நமது பெரும்பாடுகள் அகன்று ஒளி பெற்றிட ஆலயம் (இயேசுவை) நோக்கி நடக்கின்றோமா அல்லது பணம் தருவதால் இருக்கும் இடத்திற்கே வரும் இணையவழி சேவைகள்போல் இறை அருளையும் தேடுகிறோமா? சிறுவயதில் ‘‘ஆலயம் சென்று நற்கருணையைச் சந்தித்தல்’’ என்ற ஒரு புண்ணிய நடைமுறை நமக்குக் கற்றுத் தரப்பட்டது ஆனால் இன்று; ஊடகங்கள் வழி ஆலயங்களையும், திருப்பலி நிறைவேற்றும் இறை அடியார்களையும் தேர்வு செய்து ‘‘திருப்பலி காணொளி காட்சிகளை’’ காண்பதில் பெருமை அடைகிறோம். எச்சரிக்கை... ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்கிறது தமிழ். நமது பெரும்பாடுகள் அகன்றிட, நிலை வாழ்வை கண்டு மகிழ்ந்திட இருக்கும் இடத்தை விட்டு இடம் பெயர்ந்து இறை பாதம் அமர்வோம். அன்னை மரியா போல் இறை ஆசியை நேருக்கு நேர் முகமாய் அனுபவிப்போம்.

**செபம்:-** இறைவா உயிருள்ள உமது இறை பிரசன்னத்தை நேருக்கு நேர் முக முகமாய் கண்டு தரிசிக்கும் அருள் தாரும்.

# ஐந்தாம் நிலை

## சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவிற்கு உதவுகின்றார்.

**உதவும் கரங்கள் உயிர் காக்கும் கரங்கள்**

**நற்செய்தியில் லூக்கா 23:26. , மத்தேயு 27:32, மாற்கு15:21. ன் படி சிரோன் ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவின் பாடுகளில் உதவிய ஓர் அயலான். வாருங்கள் அவர் எப்படிப்பட்டவர் எனக் காண்போம். சீமோனின் பண்புகள்**
**1) அன்றைய கடமையை - வயல் வேலைகளை முடித்து வருபவர்.**
**2) கண் முன் என்ன நடக்கின்றது - என்ற விழிப்புணர்வோடு பார்ப்பவர்.**
**3) எனக்கென்ன என்று விலகிப் போகாமல் உண்மையைக் காண ஆர்வத்துடன் கூட்டத்திற்குள் நுழைந்தவர். இவைகள் ஒரு பொறுப்புள்ள மனிதனின் பண்புகள்தான், அதனால்தான் சேவகர்களின் பிடிக்கு ஆளாகி இயேசுவின் சிலுவையைச் சுமந்து சென்றார். இன்றைய நவீன உலகில் இப்படிப்பட்டவர் இருக்க முடியுமா என யோசிக்க வேண்டாம்**

**இதோ, பாருங்கள் நம் புனித அன்னை தெரேசா அவர்களை...**
**1) தான் உண்டு தன் துறவர வாழ்வு உண்டு என வாழாமல்,**
**2) தனதுபணி இடமான - கல்கத்தாவின் -ஏழைத் தொழு நோயாளிகளின் வாழ்கையைப் பற்றிய விழிப்புணர்வு பெற்று...**
**3)தனி ஒருவராகத் தன்னார்வத்துடன் தொழு நோயாளிகள் நல்வாழ்வு பெற தன்னை அர்ப்பணித்தது. நினைவு கொள்க:- சீமோனுக்குச் சேவகர்களின் நிர்பந்தம் அவரின் கைகளைப் பிடித்து இயேசுவின் சிலுவையைச் சுமக்கச் செய்தது... அன்னை தெரேசாவிற்கோ அவர்பற்றிக் கொண்ட இயேசுவின் அன்பு தொழுநோயாளிகளைத் தொட்டு தூக்கிட அருள்பாலித்தது. இன்று தொழு நோயாளிகளின் மறுவாழ்வின் - அடையாளமாக அன்னையைக் கௌரவப்பதில் அகிலம், பெருமை கொள்கிறது. ஆம்... இந்த இருவரின் கரங்களும் உதவும் கரங்கள் உயிர்காக்கும் கரங்கள் வாருங்கள் யோசிப்போம்! சீமோன் மற்றும் அன்னை தெரேசாவிடமிருந்த இந்தக் கடமை உணர்வு, சமூக விழிப்புணர்வு, நன்மையைச் செய்ய விரும்பும் தன்னார்வம் - இவையெல்லாம் நம்மிடமும் இருக்கின்றதா? இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்த இயேசுவின் அன்பு நமக்குள்ளும் இன்றும் உயிருடன் இருக்கின்றது - ஆனால் அதன் பயன்பாடுகள் மட்டும் எதிர்பார்ப்புகள் நிறைந்த நமது சுயநலத்தைச் சுற்றி நகர்கின்றது. அவர்களோ, மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் பிறர் நலம் காண அவற்றைப் பயன்படுத்தினர். நாமும் நமது சுயநல வட்டத்தை உடைக்கவும் - நாம்பற்றிக் கொண்டிருக்கும் இயேசுவின் அன்பை அனைவர்க்கும் வாழ்வாக்க உறுதி கொள்வோம், இந்த உறுதி கண்முன் நிற்கும் அயலானைக் கட்டி அணைக்க; நமது கரங்களை விரிக்கச் செய்யட்டும்.**

**செபம்:-** தெய்வமே வாய்ப்புகள் அனைவருக்கும் ஒன்றுதானெனப் புரிந்து கொண்டோம். எங்களுடைய சுயநல ஓட்டத்தை நிறுத்தவும் பொதுநல பார்வையை அகலமாக ஆழப்படுத்தவும் அருள் தாரும்.

# ஆறாம் நிலை

## வெரோனிக்கா இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கின்றார்

**மாசுகளை அகற்றிட மனதில் உறுதி வேண்டும்**

அன்றும் இன்றும் என்றும் அனைவருக்கும் அமைதி, மகிழ்ச்சி, மனநிறைவு தரக்கூடிய தெய்வீக முகம் இயேசுவின் திருமுகம். இப்படிப் பட்ட திருமுகத்தில் படிந்திருந்த கறைகளை, எச்சங்களை, மண் துகள்களைத் தைரியமும் துணிச்சலும் கொண்ட “வெரோனிக்கா” என்ற பெண்; படை வீரர்களின் பாதுகாப்பு வளையத்தை உடைத்தவளாக இயேசுவின் முன் வந்து, அவர் முகத்தைத் துடைத்துத் தூயதாக்கினாள்.

வீர பெண்மணி - வெரோனிக்காளுக்கு விவலியத்தில் பெயரும் இல்லை, விலாசமும் இல்லை. இருந்தும், புனித வெரோனிக்கா, இயேசுவின் முகத்தைத் துடைக்கத் தீர்க்கமான முடிவு எடுத்தார். கூட்டத்தைப் பார்த்து வெட்கம் இலலை. படை வீரர்களைப் பார்த்துப் பயமில்லை; நேரம் வந்தவுடன் தயக்கமின்றிச் செய்து முடிப்பேன் என்ற தன்னம்பிக்கையுடன்- தன்னார்வமுடன் தைரியமும் துணிச்சலும் கொண்டவராக முன் சென்று, இயேசுவின் - திருமுகத்தை மாசற்றதாக ஒளிரச் செய்தார்.

வெரோனிக்காவிற்கு ஒன்றும் இல்லை ஆனால் சிரேனே ஊர் சீமோனைப் போல நமக்கு ஊர் பெயர் உண்டு அனைத்திற்கும் மேலாகக் கிறிஸ்தவன் என்ற அடையாளமும் உண்டு. இந்த அடையாளத்தால் நமக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்ற பெருமையும் உண்டு. அப்படி என்றால் நமது செயல்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும் அல்லவா?

அன்று கூட்டத்தில் மாசுகள் நிறைந்த முகமாக இயேசு ஒருவர் இருந்தார். இன்று நமது வீட்டில் நமது ஊரில் என வரிசைப்படுத்தினால் மாசு படிந்த எத்தனை முகங்களைப் பார்க்க முடிகிறது. இவற்றிற்காக நாம் என்ன செய்கின்றோம்?... வாய்ப்பு கிடைத்தால் அவர்களா ?!!! என்று ஆச்சரியத்தில் துவங்கி... இருக்கும், இருக்கும், என்ற வியப்புகள் நிறைந்த முற்றுப்புள்ளிகளுடன் மீண்டும் அவமானத்தை உண்டாக்கி தெருக்களில் அவர்கள் முகமே காட்ட முடியாத நிலைக்கு; முடிந்தவரை முன்னேற்பாடு செய்கின்றோம்.

எங்குப் பார்த்தாலும் எனது அல்லது நமது என்ற நினைவில், முன் வைக்கும் கால்களை எச்சரிக்கையுடன் பின் வைக்கப் பழகி விட்டோம். வெரோனிக்காவிடம் இருந்த அத்தனை நல்ல பண்புகளும் நம்மிடமும் இருக்கின்றன. ஒருமுறை பயன்படுத்தித்தான் பார்ப்போமே... யார் என்றே தெரியாத வெரோனிக்கா புனிதவதி ஆகும்போது எல்லாம் தெரிந்த நாம் ஏன் ஆகக் கூடாது.? யோசிப்போம்.

செபம்:- இறைவா அனைத்து வரங்களையும் நீர் எமக்குத் தந்துள்ளீர். தன்னம்பிக்கை, தைரியம், மனௌறுதி - ஆகியவற்றுடன் துணிச்சலோடு உரிய நேரத்தில் அனைவருக்காகவும் பயன்படுத்த அருள் தாரும்.

# ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகின்றார்

**வீழ்ச்சிகளைச் சந்திக்கும் ஏற்புடமை வீழ்ந்தே கிடப்பதில்லை**

இயேசு உமது சித்தப்படியே ஆகட்டும் என்று மனுக்குல மீட்புப் பணியை ஏற்றுக் கொண்டதால், - தன் உடல் வலிமையையும் இழந்தவராக இரண்டாம் முறையும் மண்ணில் விழுந்தார். மார்த்தாள் - மரியாள் இரு சகோதரிகள் ஒருவர் பணிவிடையையும் மற்றவர் இறை வார்த்தையையும் ஏற்றுக் கொண்டனர், பயன் - பணிவிடையை ஏற்றுக் கொண்டவர் நல்ல பங்கை இழந்தார்.

இயேசு கடவுளுக்கு இணையாக இருக்கும் நிலையை விட்டு விட்டு -இறை சித்தத்தின் படி மனுக்குல மீட்ப்பை ஏற்றுக் கொண்டதால் - மண்ணில் இரண்டாம் முறையும் விழுந்தார். கல்வாரியின் மீட்பு திட்டத்தில் படை வீரரின் வற்புறுத்தலும் பாரமான மரச்சிலுவையும் கரடு முரடான கல்வாரிப் பாதையும் மீண்டும் தன்னை விழச் செய்யும் என்பதை அறிந்தும் ; இறைசித்தம் இவற்றைவிடப் பெரிது என்பதால் இயேசு எழுந்து, நடந்தார். இயேசுவின் வீழ்ச்சியில் அவர் இறை தன்மையை இழப்பது, மீட்பு திட்டத்தின் ஒரு பகுதியானதால் கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். (பிலிப்பியர் 2:9). மார்த்தாள் - வார்த்தை ஆனவர்க்கு, வரவேற்பும் உபசரிப்பும் பணிவிடையும் அவசியம் என்பதை உணர்ந்து செயல்பட்டார், நல்ல பங்கை அப்போது இழந்தாலும் - இப்போதும் நற்செய்தியில் இடம் பெற்றிருக்கிறார்.

நம்மோடு இன்று - இறை மகனைப் போல், இந்த மார்த்தாளைப் போல், பலர் மற்றவர்களுக்காகத் தங்களுடைய உரிமையான மகிழ்ச்சியையும் - சந்தோஷத்தையும் இழந்ததை அறியாமலேயே வாழ்கிறார்கள்... பாருங்கள்... பிள்ளைகளுக்காகப் பெற்றோர்கள், மாணவர்களுக்காக ஆசிரியர்கள், நோயாளிகளுக்காக மருத்துவர்கள், உணவுக்காக உழவர்கள், பாதுகாப்பிற்காக ராணுவ வீரர்கள் மற்றும் காவல்துறையினர். அனைத்திற்கும் மேலாக நல்ல பங்கை - விண்ணக வாழ்வை நாம் அடைய, நமக்காக வாழும் இறைப்பணியாளர்கள்... எனக் கூறிக் கொண்டே போகலாம் இவர்கள் எல்லோரும் இன்று நாம் அனுபவிக்கும் உலகின் நன்மைகளைக் கடமை, கட்டாயம், காலச்சூழல் இவற்றால் இழந்தவர்கள்.

எல்லா இழப்பும் - வீழ்ச்சியும் நமக்கு வலியைத் தந்தாலும், அதிலும் சில - நன்மையும் - மகிழ்ச்சியும் இருப்பதைக் காண்கின்றோம். இயேசுவின் வீழ்ச்சிக்குள் மனுக்குல மீட்பு இருந்தது. நமது வீழ்ச்சிகளில், குறைந்தபட்சம் அடுத்தவர்கான பாதுகாப்பும் மகிழ்ச்சியும் இருந்திட முயற்சிப்போம். வீழ்ச்சியின் வலிகளை வெற்றியின் படிகள் ஆக்கிட இறைவனை நாடுவோம்.

செபம்:- இறைவனே வலி மிகுந்த எங்கள் வீழ்ச்சிகளை அடுத்தவர்களின் நன்மைகளுக்காக உறுதியுடன்-உண்மையுடன் ஏற்றுக் கொள்ள அருள் தாரும்.

# எட்டாம் நிலை

## எருசலேம் நகர் பெண்களுக்கு... இயேசு ஆறுதல் கூறுகின்றார்.

அயலானுக்காக ஏறெடுக்கப்படும் இரக்கமுள்ள செபம் அற்புதங்களைச் செய்யும்

ஒரு குரல்... அதுவும் அழுகையின் குரல் இயேசுவை கல்வாரி பயணத்தின் மரண வேதனைகளுக்கு நடுவில் - நின்று, திரும்பிப் பார்க்க வைத்தது... படை வீரர்களின் அதிகார குரல், குதிரைகளின் குளம்போசை, உடன் வருவோரின் வசைகள்- ஏளனங்கள் போன்ற பல குரல்களுக்கு நடுவில் ஒரு குறிப்பிட்ட வேதனையின் குரல் இயேசுவின் காதுகளில் மிகத் தெளிவாகக் கேட்கின்றது. கருணை உள்ளம் கொண்ட இயேசுவிற்கு அவர் பின்னே அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களைக் கடந்து செல்ல முடியவில்லை.

இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழ வேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்... ஏனெனில் இதோ, ஒரு காலம் வரும். அப்போது "மலடிகள் பேறுபெற்றோர்" என்றும் "பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறு பெற்றோர்" என்றும் சொல்வார்கள். - எனக் கூறினார்.(லூக்கா நற்செய்தி 23: 27-29)

மரண வேதனைகளின் உச்சத்தில் பயணிக்கும் இயேசு ஏன் இப்படிச் செய்தார் யோசிப்போமா?... மத்தேயு 27: 55-56ன்படி இயேசுவிற்கு அறிமுகமானவர்களும் அவரைப் பின்பற்றியவர்களும் தொலையில் நின்று உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அப்படியானால் இந்த எருசலேம் நகர் பெண்கள் குற்றுயிராய் கிடந்த வழிப்போக்கனுக்கு உதவிய சமாரியனைப் போன்று (லூக்கா10: 25-37) இயேசுவிற்கு அந்நியர்களா?... ஆம் அந்நியர்களே; அதேவேளை இயேசுவின் வேதனைகளைக் கண்டு அவருக்கு உதவ முடியவில்லையே என்று ஆதங்கப்பட்டவர்கள் - அழுது புலம்பியவர்கள். உண்மையாகவே அவரின் துன்பங்களைப் பார்த்து உருக்கமாக இரக்கம் கொண்டவர்கள். இந்தச் சிறு மனிதநேயச் செயல்தான் எருசலேம் நகரப் பெண்கள் இயேசுவின் ஆறுதலைப் பெற காரணமாயிற்று.

சிறு சிறு செயல்கள் என்று என்ன வேண்டாம் வானின்று இறங்கும் சிறு மழைத்துளிதான் காட்டாற்று வெள்ளமாக மாறுகிறது. நமது மனங்களில் உருவெடுக்கும் சிறு சிறு மனிதநேய செயல்கள்தான் மனிதத்தை வாழ வைக்கின்றது. இதோ உருக்கமான இரக்கங்களால் உன்னை மீண்டும் சேர்த்துக் கொள்வேன் என்கிறார் ஆண்டவர். (எசாயா 54:7) வாருங்கள் அமைதியுடன் இரக்கத்தின் ஆண்டவர் முன் தாழ் பணிவோம்... ஆறுதல் பெறுவோம்.

செபம்:- இரக்கத்தின் ஆண்டவரே இயேசப்பா, இரக்கம் துன்பத்தை அகற்றும் இறை அருளைப் பெற்றுத் தரும் என்பதை உணர்ந்து கொண்டோம். இறுமாப்புள்ள வாழ்வை அகற்றி இரக்கத்துடன் வாழ இறைஅருள் தரும்.

# ஒன்பதாம் நிலை

## கல்வாரி இயேசுவின் மூன்றாவது வீழ்ச்சியை உறுதி செய்தது.

**வீழ்ச்சிகள் நிழலானாலும் எழுச்சிகளே எனது நிஜம்**

தனி ஒருவராக இறை சித்தத்தை நிறைவேற்றும் துடிப்புடன் முன்னெச்சரிக்கையின்றி முன்னேறியதால் இயேசு முதல் முறை - கீழே விழுந்தார். விழுந்தாலும் பரவாயில்லை மனுக்குல நன்மைக்காக இறை சித்தத்தை நிறைவேற்றுவேன் என்று தொடர்ந்தபோது அவரது உடல் பலவீனம் இரண்டாம் முறை கீழே விழச்செய்தது. என்ன ஆனாலும் இறை சித்தத்திற்கு மட்டுமே கீழ்ப்படிவேன் என்று பிடிவாதத்துடன் தொடர்ந்தபோது உலகம் அவரை மூன்றாம் முறையாக வீழ்த்தியது.

இயேசுவின் இந்த மூன்று வீழ்ச்சிகளும் வாழ்க்கையின் வீழ்ச்சிகளை உறுதி செய்கிறன. அதிலும் உலகம் நம் முன் வைக்கும் மூன்றாவது வீழ்ச்சியின் காரணிகளான பெருமை, பேராசை, காமம், பொறாமை, பெருந்தீனி, கோபம், மற்றும் சோம்பல் ஆகியவை நம்மை அழித்து விடக்கூடியவை. இதில் ஏதேனும் ஒன்றில் விழுபவரும் இறையருளின்றி எழுவது சிரமம் ஆகும். மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வை இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக் கொடுப்பார்? என்கிறார் இயேசு. (மத்தேயு 16:26) எனவே வீழ்ச்சிகள் நிழலானாலும் வெற்றிகள் மட்டுமே நிஜம் என்பதை மனதில் கொண்டவர்களாக, மீண்டும் மீண்டும் படிக்கும் ஏசாயா 53: 4 முதல் 7 வரை உள்ள வார்த்தைகளின் படி செம்மறியின் மீது ; மீண்டும் நமது சுமைகளைச் சுமத்தாமல் இருப்போம். யூதாஸ் ஸ்காரியத்தைப் போல் சொந்தமாக முடிவு எடுப்பதையும் தவிர்ப்போம்.

பர்த்திமேயு குருடனைப் போல் நம்பிக்கையுடன் தாவீதின் மகனே இறங்கும் என்று கூப்பிடுவோம். அருகில் நின்றவர்கள் பர்த்திமேயுவிடம் துணிவுடன் எழுந்து வாரும் இயேசு உன்னைக் கூப்பிடுகிறாரெனக் கூறியது போல் - இன்று திருஅவை ஒப்புரவு அருட் சாதனத்தின் வழியாக நம்பிக்கையுடன் இறை பாதத்தில் அமர்ந்திட நம்மை அழைக்கிறது. பர்த்திமேயு மேலுடையை எறிந்து விட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தார்(மாற்கு 10:49-50). பார்வையும் பெற்றார். பார்வை இல்லாதவரே தன்மேலுடையை எறிந்துவிட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வரும்போது பார்வையுள்ள... நாம்!!!! - எச்சரிக்கைக்குப் பின்பும் ; மறுதலித்த பேதுருவைப் போல் செயல்பட்டாலும் - இப்போது உலகின் - தீமைகளை முழுமையாகத் தூக்கி எறிந்துவிட்டு அதே பேதுருவைப் போல் ஆன்மாவை ஆதாயமாக்க, உண்மையான மனமாற்றத்துடன் இறை பாதம் அமர்வோம்.

செபம்:- இறைவா நாங்கள் வீழ்வது நிச்சயம் என்றாலும் உமது வலக்கரம் எம்மைத் தாங்கும் என்ற நம்பிக்கையில் உமது வழியில், ஒளியில் - தொடர்ந்து பயணிக்க அருள் தரும்

# பத்தாம் நிலை

## படைவீரர்கள் இயேசுவின் ஆடையை அகற்றுகிறார்கள்

**ஆடையை அகற்றுவது எளிது ; எளிதல்ல இறை சாயல் எனும் தூய வெண்ணிற ஆடையை அணிந்து கொள்வது.**

**சுற்றி இருந்த அனைவரும் வெட்கப்பட்டுத் தலைகுனிய படை வீரர்கள் ஆண்டவர் இயேசுவின் ஆடையை அகற்றுகின்றார்கள். மனுமகனோ செய்வது அறியாது அமைதி காத்தார். அவரது வேதனையோ பெருகிற்று. அனைவர் முன்பும் இயேசு ஓர் அவமானத்தின் சின்னமானார். அன்று, ஆடையற்ற முதல் ஆதாமிற்கு மறைந்து கொள்ள மரங்கள் இருந்தன. இங்கு இரண்டாம் ஆதாமிற்கு... வெறுமையை இன்னும் வெளிப்படையாகக் காட்சிப்படுத்த, படை வீரர்களுடன் இணைந்து மரச் சிலுவையும் காத்திருந்தது.**

**உலகம் இன்று, ஒருமுகமாக இணைந்து பிறரின் குறைகளை, வெளிப்படுத்துவதில் வெட்கப்படுவதில்லை. எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக நமக்குச் சொன்னவர் இயேசு. (மத்தேயு: 18 : 20). இதன்படி, ஈராயிரம் ஆண்டுகள் கடந்த பின்பும் நம்மிடையே பயணிக்கும் இயேசுவிற்கு - நமது அன்பற்ற வாழ்கையாலும், இரக்கமற்ற செயலாலும், வெறுப்பின் உச்சத்தாலும், நான் என்ற ஆணவத்தாலும், உலகத் தீமைகளில் மூழ்கிக் கிடக்கும் அடிமைத்தனத்தாலும் ; வெளிப்படையாக அவர் நடமாட முடியாத ஆடையற்ற - வெறுமையான நிலையை மீண்டும் உருவாக்க வேண்டாம்.**

**மேலும் நம் முன் நிற்கும் தனி ஒருவரை - ஒரு குடும்பத்தை... நமது வார்த்தைகளால் - செயல்களால் - வேதனைகளுக்கு உட்படுத்திச் செயலற்ற நிலைக்கு - நிர்வாணமாகத் தள்ளும்போது; உண்மையாகவே அங்கு - ஆண்டவர் இயேசு ஆடையற்றவராக - செயலற்று நிற்கின்றார் என்பதை மறக்க வேண்டாம் இறை சித்தத்திப்படி இயேசுவுக்கு அன்று நடந்தது - இன்றும் தொடருமே ஆயின், அது மானிட மடமையின் அடையாளம் ஆகும்.**

**இந்த மடமையை அகற்றுவோம். கிறிஸ்துவின் ஆடையின் மகிமையை உணர்வோம். பெரும்பாடுள்ள பெண் கிறிஸ்துவின் ஆடையைத் தொட்டவுடன் நலம் பெற்றார் (மத்9:20). ஏனெனில் அந்த ஆடை கிறிஸ்துவாகவே, அவரின் அடையாளமாகச் செயல்பட்டது. அன்று படைவீரர்கள் அதை எடுத்துச் சென்றனர். இன்று, திருமுழுக்கின் வழியாக நாம் அதே ஆடையைத்தான் இறை சாயலாகத் தூய வெண்ணிற ஆடையாக உலகின் பெரும்பாடுகளைப் போக்கும் அருமருந்தாகப் பெற்றிருக்கிறோம். எபேசியர் 4:1படி பெற்றுக்கொண்ட அழைப்பிற்கு ஏற்ப வாழ்ந்திட கடமைப் பட்டிருக்கின்றோம். ஆடை பாதி என்கிற உலகில் அன்புதான் மீதியென வாழ்த்து காட்டுவோம்.**

**செபம்:- பெரும்பாடு உள்ள உலகில், உயிர் காக்கும் உன்னத மருந்தாக - தூய வெண்ணிற ஆடையாக உம்பாதம் அமர்ந்து வாழ அருள் தாரும்**

# பதினொன்றாம் நிலை

## படை வீரர்கள் இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.

**மரச் சிலுவை மனிதத்தை ஏற்றுக் கொண்டது. மனிதம் மரச்சிலுவையை மகிமை படுத்தியது.**

**இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள் என்பதன் உட்பொருள் அவர் ஆணிகளிலால் பிரிக்க முடியாதபடி சிலுவையோடு இணைக்கப்பட்டார் என்பதாகும். அழிவின் சின்னமாக - அவமானத்தின் சின்னமாக அறியப்பட்ட மரச்சிலுவை ஆண்டவர் இயேசுவோடு இணைந்த பின் வாழ்வின் சின்னமாக மகிமையின் சின்னமாக உருமாற்றம் அடைந்தது. சிலுவை பற்றிய செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை. என்கிறார் பவுல் அடிகளார். (1 கொரிந்தியர் 1 : 18).**

**சிலுவை தன்னைப் பற்றிக் கூறுவதைக் கேட்போம்.**

**நண்பர்களே... சிலுவையாகிய நான் எடுப்பார் கைப்பிள்ளை தான். இயேசு, எப்போது என்னைத் தொட்டுத் தூக்கி தோள்களில் சுமந்து கொண்டாரோ - அது முதல் கல்வாரியில் அவருடைய கடைசி மூச்சு வரை; அவருக்குத் துணையாக அடையாளமாக நடுமரமாக உறுதியுடன் நின்றேன். வழியில் அவர் பெற்ற வேதனைகள், கசையடிகள் அனைத்திலும் நானும் பங்கு பெற்றேன். இயேசுவை நான் பிரியக் கூடாது என்பதற்காக அவருடைய கைக்கால்கள் ஆணிகளால் பிளக்கப் பட்டபோது...அவரோடு இணைந்திருக்க அதேஆணிகள் என்னைப் பிளந்து ஊடுருவ இடம் தந்தேன்.**

**இன்று, இயேசு என்றால் சிலுவை - சிலுவை என்றால் இயேசு என்ற நிலைக்கு உயர்ந்துள்ளேன். இந்த உன்னத நிலையை அடைய நான் செய்தது என்ன? ஒன்றுமில்லை. உண்மை என்னவென்றால் அவர் என்னைச் சுமந்தபின் நான் அவரை விட்டு இம்மியும் விலகாமல் நிழலென அவரோடு பயணித்தேன் - அவ்வளவுதான்...**

**இயேசு மரக்கட்டையான எனக்குத் தந்த மகிமையும் கொண்டாட்டமும் உங்களுக்கும் தேவைதானே? அப்படி என்றால் இறை சாயலும் அவர் ஆவியும் உயிராய்க் கொண்ட உங்கள் பயணங்கள் யாரோடு? ஏன்? எங்கு? எப்படித் தொடர்கின்றன? என ஆராய்ந்து பார்க்க வேண்டும். இயேசு தன்னையே மறுத்து அவரைத் தொடரக் கூறுகின்றார்.(லூக்கா 9:23:) பவுல் அடிகளார்... கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விடுங்கள். என்கிறார் (கலா 5:24). இதோ, கட்டளையும் - கடைப்பிடிக்க வேண்டிய முறைமையும் உங்கள் கைகளில்... எல்லா நிலைகளிலும் அவரைத் தொடருங்கள். ஆணி கொண்டுதான் அவரோடு இணைய வேண்டும் என்றாலும் - அதற்கும் அஞ்சாதீர்கள். அவரே வழியும் வாழ்வும் ஆவார்.**

**செபம்:- இயேசு தெய்வமே சிலுவையைப் போல் எந்நிலையிலும் உனது நிழலாய் உம்மைத் தொடர எனக்கு வேண்டிய அருளைத்தாரும்.**

# பன்னிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் இறக்கிறார்.

**இறப்பது நான் என்றாலும் வாழ்வது என் இயேசுவாக இருக்க வேண்டும்.**

**இயேசு, அந்த இரசத்தைக் குடித்ததும், "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார். (யோவான் 19:30). இந்த 12ம் நிலையில் திருஅவை இந்த நிகழ்வை நமக்கு நினைவுபடுத்தும்போது இயேசு சிலுவையில் இறக்கிறார் என்று நினைவுபடுத்துகிறது. இறக்கிறார் என்ற வார்த்தைக்கு இறந்து கொண்டு இருக்கின்றார் என்று - பொருள். திருஅவை நினைவு படுத்துகின்றது என்றவுடன் வேறுயாரோ நமக்கு நினைவு படுத்துகிறார்கள் என்று நினைக்க வேண்டாம். இயேசு கிறிஸ்துவை தலையாகக் கொண்டு, நீங்களும் நானும் ஒன்றாக இணைந்துள்ள திரு அவைதான் நினைவு படுத்துகின்றது. எச்சரிக்கை!... நாம் இன்று - இயேசு... . உயிர்த்ததின் சாட்சிகளாகப் பயணித்துக் கொண்டு இருக்கும்போது... அவர் இறந்து கொண்டிருப்பதைச் சான்று பகர்ந்திட திருஅவை; நம்மை அழைக்கிறது.**

**பவுல் அடிகளார் வாழ்வது நான் அல்ல எனில் கிறிஸ்துவே வாழ்கின்றார் என்று முழக்கம் இடும்போது நாம் யாரை இறந்து கொண்டு இருக்கிறார் என்று கூறுகின்றோம்?.... அப்படி என்றால் பவுலடிகளார் அதாவது நாம் இறந்து கொண்டிருக்கின்றோமா?... ஏன்? - எதற்காக?..... இதோ, கிறிஸ்துவின் நன்மைத் தனத்தை உலகில் நிலை நிறுத்துவதற்காக... நாம் இறந்துபட வேண்டியவர்கள் ஆகிறோம்.**

**கிறிஸ்துவின் நன்மைதனம் என்பது அவர் தன் பொதுவாழ்வில் முந்தத் தனி ஒருவரின் - இறை அரசின் குடியுரிமைக்காக, அப்பா- தந்தாய் உறவுக்காக, தனி மனித - சமூகக் கடமைகளுக்காக, முடிவாகக் கெத்சமனேயில் இறை சித்தம் - தன்னில் நிறைவேறுவதற்காகக் குரல் கொடுத்தது தான். அவர். இறுதியில் தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் "என்று உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்.**

**பவுல் அடிகள் நாங்கள் சுயநல மதிப்பீடுகளில் இறந்து கொண்டே இருந்தால் மட்டுமே - கிறிஸ்துவின் மேன்மைமிகு மதிப்பீடுகள் 60, 100 என்று வாழ்வு பெறும். நாம் அந்த நல்ல கள்வனைப் போல் இயேசுவின் நன்மைத் தனத்தைப் புரிந்து ஏற்றுக் கொண்டாலே வான் வீட்டில் இடம் உண்டு. இவ்வையக வாழ்வில் நமக்குக் கிறிஸ்து - அவன் என்ற பெருமையும் உண்டு... இயேசு உலகிற்குச் சமாதானம் தரவே வந்தேன் என்றார். எனவே, உயிர் இயேசுவிற்கு - உழைப்பு உலக அமைதிக்கு என்று வாழ்ந்து காட்டுவோம் - நமது இறப்பில் விண்ணக தந்தையின் கரங்களில் நமது ஆவியை ஒப்படைப்போம்.**

**செபம்:- விண்ணகத்தில் உமது சித்தம் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுவதாக ஆமென்**

# பதிமூன்றாம் நிலை

## இறை மகனின் உடலை அன்னை மடிமீது வளர்த்துகிறார்கள்.

**வியாகுலங்கள் விடைபெறும் மன உறுதி நமக்கு இருந்தால்.**

**சிமியோன் அவர்களுக்கு ஆசிகூறி, அதன் தாயாகிய மரியாவை நோக்கி "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்றார். (லூக்கா நற்செய்தி 2:35)**

**பின் வருவது ஒரு கற்பனை. இருந்தாலும், கவனமாகக் கவனிக்கவும். சிலுவையடியில் மகனின் உடலோடு அமர்ந்திருந்த அன்னை மரியாவை பார்த்து ஒருவர் ஒரு கேள்வியைக் கேட்டார். அம்மா உங்களுக்கு அதிகத் துக்கமான நாள் எது?... என்று. அன்னை பதில் கூறினார்... என் மகன் இறந்ததை விட, எனக்குத் தூக்கமான நாள் வேறு உண்டோ என்று... சிறிது நேரம் கழித்து வேறொரு மனிதர் அவரிடம் அம்மா உங்களுக்கு மகிழ்ச்சியான நாள் எது என்று கேட்டார்... அன்னை யோசித்து விட்டு வேதனைகளின் நடுவே இறை சித்தத்தை என் மகன் நிறைவேற்றிய இந்த நாள் மகிழ்ச்சிக்குரிய நாள்தானெனப் பதில் கூறினார்.**

**இதைப் போலவே இயேசுவிடமும் கேள்விகள் தொடர்ந்தன... துக்கமானநாள் எது?... என்றவுடன் அவர் இதோ நான் சிலுவையில் மரித்த இந்த நாள்தான் என்றார். பின்னர் அவரிடம் உங்கள் மகிழ்ச்சியான நாள் எது?... என்றபோது...சற்று யோசித்து விட்டு அதுவும் இந்த நாள்தான் என்றார் எப்படி என்று கேட்டபோது ... ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, இந்த நல்ல கள்வனின் புரிதல் பிற்காலத்தில் உலக மக்களும் என்னைப் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையைத் தந்தது... அடிமையின் கோலம் பூண்டு சிலுவை சாவவை ஏற்றுக்கொண்டது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது என்றார்.**

**இந்தக் கற்பனைகள் தரும் பாடம் எல்லாத் துன்பங்களும் துன்பமல்ல அவற்றின் பின் மறைந்திருக்கும் இன்பத்தைத் தேடி அனுபவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதே. ஒரு பெண்ணின் மரண வேதனைக்குச் சமமான பிரசவ வலி பிறந்த குழந்தையைப் பார்க்கும்போது இன்பமாகின்றது. பெற்றோர்களின் துன்பம் மிகுந்த உழைப்பு பிள்ளைகளின் வெற்றியில் இன்பமாய்த் தோன்றுகிறது...இப்படிக் கூறிக்கொண்டே போகலாம். ஒருவர் அனுபவிக்கும் துன்பம் உண்மைக்கும் நேர்மைக்கும் உட்பட்டது என்றால் நிச்சயம் அவர்கள்பின் நாளில் மகிழ்ச்சியைக் காண்பார்கள். ஆகவே கடவுளுடைய கட்டளைகளைக் கடைபிடித்து, இயேசுவின்மீது நம்பிக்கை கொண்டிருக்கும் இறைமக்களுக்கு மனவுறுதி தேவை." (திவெளி :14:12)**

**கவனிக்க...இயேசுவை விட மரியாளுக்கு மன உறுதி அதிகம் இருந்ததால்தான் கல்வாரியில் தன் மகனின் உடலை மடிமீது தாங்க முடிந்தது. அந்த மன உறுதியை பெற்றுக்கொள்ள அன்னை மரியாளின் அன்பு மக்களாக வாழ்வோம் இயேசுவிற்கும் நல்ல கள்வனைப் போல் நம்பிக்கையை வளர்ப்போம்.**

**செபம்:- அன்னையே மனௌறுதியை நாடும் எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

# பதினான்காம் நிலை

## இயேசுவின் உடலைக் கல்லறையில் அடக்கம் செய்கின்றனர்.

**கல்லறை இல்லாத இயேசுவிற்கு நாம் தான் கல்லறைகள்.**

**இயேசுவின் உடலை இறக்கி, மெல்லிய துணியால் சுற்றிப் பாறையில் குடைந்திருந்த கல்லறையில் வைத்தார். அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. (லூக்கா நற்செய்தி 23:53.)**

**யூத மரபுப் படி உயிரோடு இருக்கும் போதே யூதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கல்லறை தயார் நிலையில் இருக்கும். தாவீதின் வழித்தோன்றலுக்கு அதுவுமில்லை. பின்னாளில் இயேசுவை உலகம் எவ்வாறு ஏற்றுக்கொள்ளும் என்பதன் முன் அடையாளமாக இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். யாரும் வைக்கப்படாத வெறுமையாக இருந்த கடினமான பாறையில் குடைந்திருந்த கல்லறையில் இயேசுவை வைத்தார்கள் என்று விவிலியம் பறைசாற்றுகிறது. ஆகப் புத்தம் புது வெறுமையான பாறை கல்லறையால் மட்டுமே இயேசுவை தன்னகத்தே வைத்துக்கொள்ள முடியும் என்பது வெளிச்சம் ஆகிறது.**

**ஒரு கல்லறை இல்லாத இயேசுவிற்கு இன்று உலகில் கோடான கோடி கல்லறைகள் உயிருடன் அதுவும் விரும்பி வேண்டி இயேசுவை ஏற்றுக்கொண்டு நடமாடுகின்றன. புரியவில்லை... அந்தக் கல்லறைகள் அவர் முன் மண்டியிடும் நீங்களும் நானும்தான் என்பதில் மகிழ்ச்சி அடைவோம். ஒப்புரவு திரு அருட்சாதனத்தினால் நம்மை வெறுமையாக்கி தூய்மையுடன் இயேசுவின் உடலையும்-அவருடைய வார்த்தைகளையும் ரத்தத்தையும்-அவருடைய குணநலன்களையும் பெற்றுக் கொள்ளும் நாம் தான் அந்த அதிசய அற்புத கல்லறைகள்.**

**தொல்லியலாலரகள் (Archaeologists) இன்று புதையுண்ட கல்லறைகளைத் தோண்டி ஆய்வு செய்து அதில் யார் இருந்தார்கள் எப்படி இருந்தார்கள் என்று உலகிற்கு அறிவிக்கின்றார்கள். பொதுத்தீர்வை நாளில் நம்மைத் தோண்டி ஆராயும் இறைவன் நமக்குள் இயேசுதான் இருக்கிறார் என்று காணும் வண்ணம் வாழ முயற்சி செய்வோம். மாறாக ஒன்றும் இல்லாமல் திறந்த நிலையில் இன்று இருக்கும் வெற்றுக் கல்லறைபோல் நாம் வாழ வேண்டாம்.**

**உலகோர் மகிழ்ந்திருக்க இயேசு உலகிற்கு அருளிய அற்புதம் அவருடைய திருவுடல் வார்த்தைகளும், திருரத்தம்-நற்குணங்கள் ஆகும். திருஅவைப் பாரம்பரியமாக நம்மை, திவ்விய நற்கருணை வழியாக இந்த அற்புதங்களை உள்வாங்கவும் - அவைகளால் வாழவும் அழைக்கின்றது. வழக்கப்படி அஃது இன்னாருடைய கல்லறை என்று கூறும் உலகம், நம்மைப் பார்த்து இவர்கள் இயேசுவின் கல்லறைகள் என்று கூறிட ; வாய்ப்பை நமக்கு நல்கிய இறைவன் என்றென்றும் வாழ்த்தப் பெருவாராக.**

**செபம்:- கடவுளே நாங்கள் கல்லறைகளே ஆனாலும் நீர் தங்கி வாழும் ஆலயங்களாக உருமாற அருள் தாரும்.**



**உங்கள் சிந்தனைக்கு:-**

# சிலுவையை நிழலாகத் தொடர்ந்த மரியாள் விண்ணுலக அரசி ஆனார்!

## ***அன்பின்மடல்***